# சங்ககால மக்கள் வாழ்வில் இசை

*மி. சுவீட்லின் சுவிதா*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
ஜவஹர்லால் நேரு அரசுக்கல்லூரி
போர்ட்பிளேயர், அந்தமான் நிக்கோபார் தீவுகள்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5206

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழ் மக்களின் வாழிவியல் கூறுகள் ஒவ்வொன்றும் நமது சமுதாய பண்பாட்டின் அடையாளங்களாக உள்ளன. தமிழ்ப்பண்பாட்டின் கலாச்சாரத்தின் அடிப்படை அணிவேராக இருந்தது கலைகள். சங்ககால மக்களின் கலை வாழ்வில் இசை மிகவும் முக்கியமான இடம் வகித்தது. இயல், இசை, நாடகம், எனத் தமிழை முத்தமிழாகப் பாகுபடுத்தினர். தமிழர்களுக்கு இசை என்பது உயிரும், உடம்பும் போன்றது. இசை உயிர்களை இசைய வைப்பது. இசைக்குள் எல்லா உயிகளும் அடங்கும். சங்க கால மக்கள் இசைத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரின் இசைப் புலமையை வெளி ப்படுத்துவனவாக அமைந்துள்ளன. குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப்பண், படுமலைப்பண், விளரிப்பண், ஆம்பல் பண், காமரப்பண் எனப் பல்வேறு பண்களையும் காலை, மாலை எனப் பொழுதறிந்து இசைத்து மகிழ்ந்தனர். இசை சங்ககால மக்கள் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் எத்தகைய இடம் பெற்றிருக்கிறது, இன்றியமையாத ஒன்றாக அமந்திருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்படவுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *யாழ், வெறியாடல், முழவு, தண்ணுமை, வேளாண், கிணை, தேவராட்டி*

## முன்னுரை

சங்க்காலம் முதல் இக்காலம் வரை இசையை விரும்பி நாடுவது மனித இயல்பு. சங்ககால பழந்தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர் அவர்கள் வாழ்வில் இசையும், இலக்கியமும் முக்கிய இடம் வகித்தது. இசைக்கருவிகள் கண்டுபிடி க்கும் முன்னர் வாயிலிருந்து வெளி ப்படுத்தும் ஓசையால் இசை யை அறிந்து கொண்டனர். மனிதர் தன் உணர்ச்சிகளை வெளி ப்படுத்துவதற்கு இசை ஒரு கருவியாயிற்று. பண்கள், இசைக்க ருவிகள், இசைக் கலைஞர்கள், இசைப்பாடல்கள் என இசைபற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்ககால மக்களின் அக வாழ்விலும், புறவாழ்விலும் இசையின் முக்கியதுவம் குறித்தும் அவர்கள் இசைக்கும் இசைக்கருவிகள் குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

### இசைக் கருவிகளும் கலைஞர்களும்

சங்ககாலத்தில் ஆண்கள், பெண்கள் மட்டுமல்லாது இசையும், கூத்தும் வல்ல பாணர், பாடினியர், விறலியர், போன்றோர் பண்ணும் தாளமும் கூடிய இசைப் பாடல்களைப் பண்ணிசைக் கருவிகள் தாளவிசைக் கருவிகள் ஆகியவற்றின் துணையோடு சிறப்பாகப் பாடினர். யாழ், கின்னரம், குழல், சங்கு தூம்பு, வயிர், தண்ணுமை, முழவு, முரசு, பறைகிணை, துடி, தடாரி, பாண்டில் போன்ற இசைக்கருவிகள் இருந்துள்ளன. தமிழ் இசைக்கலைஞர்கள் பாணர், பொருநர், கூத்தர் எனப்பட்டனர். பொருநர்கள் பரணி பாடுவதிலும், நடனம் ஆடுவதிலும் வல்லவராய் திகழ்ந்தனர் பாணர் என்பவர் வாய்ப்பாட்டிலும் இசைக் கருவிகளை இசைப்பதிலும் வல்லவர்கள் கூத்தர் என்போர் பாடிக் கொண்டே ஆடும் திறன் படைத்தவர்கள்.

பொருநர்கள் மூன்று வகையாக உள்ளனர் ஏர்க்காளம் பாடுவோர் போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் உழகை்கும் மக்களை பாடல்கள் பாடி மகிழ்விப்போர் ஏர்க்களம் பாடுவோர் போர்களங்களில் போர் நடக்கும் காலங்களில் மன்னர் மற்றும் படைவீரர்களுக்காக இசைக்கருவிகள் மீட்டிப் பாடுவோர் போர்களம் பாடுவோர். பரணி பாடுவோர் விழாக் காலங்களில் தம் இசைத் திறமையை அவளிப்படுத்துபவர்.

### பாதுகாக்கும் கருவியாக இசை

தமிழர்கள் இசையை தம் மனதைப் பண்படுத்தும், உற்சாகப்படுத்தும் ஒரு கருவியாக மட்டும் பாராமல் தங்கள் வழித்துணையில் கூடவரும் பாதுகாப்புக் கருவியாகவும் பார்த்தனர். இசை சாதாரண மனிதர்களை மட்டுமின்றி கொடிய மனம் படைத்தவர்களையும் இரக்க உணர்வு அகாண்டவர்களாக மாற்றும் சக்தி வாய்ந்தது.

பொருநர் கூட்டம் பாலை வழியில் செல்லும் போது யாழை மீட்டிக் கொண்டு பாலைப்பண் பாடிக் கொண்டே செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஏனென்றால் வழியில் ஆறலைக் கள்வர்களின் வழிப் பறியிலிருந்து தப்பிப்பதற்காக. பொருநர்களின் இசையைக் கேட்ட கள்வர்கள் தங்கள் வழிப்பறி தொழிலை மறந்து பொருநர் களுக்கு உதவும் நண்பர்காளாக மாறி விடு. பாலைப்பண் கள்வர்களைக் கூட மயங்கச் செய்யும் வலிமை படைத்ததாக உள்ளது. இதனை

> **“யாறலை கள்வர் படைவிட வருளின்**
> **மாறுதலை பெயாக்கு மருவு இன் பாலை”**
> **-பொருநராற்றுப்படை 21-22**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

மேலும் மலைபடுகடாமில் கூத்தர்கள் இரவு நேரத்தில் குன்றத்தில் நடந்து செல்லும் போது கொடிய விலங்குகளிடமிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டே செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள். இதனைப் பின்வரும் பாடல்வரிகள் உறுதிப்படுத்தும்.

> **“இயங்கல் ஓம்பிநும் இயங்கன் தொடுமின்”**
> **மலைபடுகடாம் - 277**

இவ்வாறு கள்வர்கள் மற்றும் கொடிய விலங்குகளிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய தற்பாதுகாப்புக் கருவியாகவும் சங்க கால மக்கள் இசையைப் பயன்படுத்தினர்.

### கடவுள் வழிபாட்டில் இசை

கடவுள் வழிபாட்டின் போது இசையுடன் தங்கள் வேண்டுதல்களைச் சமர்ப்பிப்பது என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் ஒன்றாகும். தமக்கு வரும் நன்மை, தீமை எல்லாவற்றிற்கும் காரணம் இறைவனே என மக்கள் நம்பினர். எனவே கடவுள் வழிபாடு மக்கள் வாழ்வோடு இணைந்து காணப்பட்டது. இறைவனை வழிபட, இறைவனோடு ஒன்றித்திருக்க இசையும் ஒரு கருவியாக இருந்தது.

*திருமுருகாற்றுப்படையில் திருவாவினன் குடியில் முருகனை வழிபட்ட காந்தர்வர்கள் மனதை யாழிசையால் பணபடுத்தியவர்கள் ஆவார். இவர்கள் யாழிசை மீட்டிப் பாடிக் கொண்டே முருகன் சந்நிதிக்குச் செல்ல அவர்தம் மகளிரும் அவர்களைத் தொடர்ந்து சென்று முருகனை வழி பட்டனர்.*

**"செவி நேர்பு வைத்த செய்யுறு நிலவின்**
**நல்வாழ் நவின்ற நயனுடைய நெஞ்சின்**
**மென்மொழி மேவலர், இன்நரம்பு உளர**
**மாசு இல் மகளிரொடு மறு இன்றி விளங்க"**
**திருமுருகாற்றுப்படை -140-147**

*சிறு ஊரிலே இருக்கின்ற சுற்றத்தாருடன் கூடி தொண்டகம் எனும் சிறிய பறை இசைக் கருவியை இசைத்து குமரக் கடவுளுக்கு முன் குரவைக் கூத்தாடினர் என்ற செய்தியினைப் பின்வரும் திருமுருகாற்றுப் படை பாடல் வரிகள் மூலம் நன்கு அறியலாம்.*

**"குன்றகச் சிறுகுடி கிணையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறை குரவை அயர"**
**திருமுருகாற்றுப்படை-196-197**

## மருத்துவத்தில் இசை

*மக்களின் உடல் நலத்திலும் இசை மிகப்பெரும் பங்கு வகிக்கின்றது. நோய் வாய்ப்பட்டவர்களின் நோய்தீர்க்கும் மருந்தாக இசை உள்ளது. சங்க இலக்கியத்தில் காணப்படும் பல கருத்துக்கள் தற்போதுள்ள இசைமருத்துவம் சொல்லும் கருத்துகளுடன் ஒத்துப் போகின்றன. தலைவியின் உடல் வேறுபாடு கண்டு நிகழ்த்தப்படும் வெறியாட்டு ஒரு வகையான இசை மருத்துவமே. தலைவியின் மனநோய்க்கு மருந்தாக இசை பயனடபடுத்தப்பட்டுள்ளது.*

**"கூடுகொள் இன்னியம் கறங்க**
**ஆடு அணி அயர்ந்த அகன் பெரும்பந்தர்**
**வேண்போழ் கடம்பொடு சூடி இன்சீர்**
**ஐது அமை பாணி இரீஇ"**
**அகநானூறு-98:14-17**

*இப்பாடலின் வழியாக வெறியாட்டில் இசை மைய ஆற்றலாக விளங்கியது உணர்த்தப்பட்டுள்ளது.*

*மேலும் இசைக்கருவிகள் போரில் புண்பட்டோர்க்கு வலி தோன்றா வண்ணம் உள்ளத்தை ஈர்க்கவும், சிகிச்சை தரவும் பயன்படுத்தப்பட்டன.*

*யாழ், பல்லியம், இசைமணி முதலிய இசைக்கருவிகள் மருத்துவத்திற்குப் பெரிதும் பயன்பட்டன இதனை.*

**"வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க"**
*புறம்-281-2*

*என்ற பாடல்வரிகள் மூலம் உணரலாம்.*

*காஞ்சிப் பண்பாடி பல இசைக்கருவிகள் முழங்கி மனையின் கண் நறுமணம் கமழும் அகில் புகையை எழுப்பியும் போர் வீரர்களுக்கு இசைமருத்துவம் செய்தனர் என்ற செய்தியும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.*

**"இசைமணி எறிந்து காஞ்சி பாடி**
**நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇ"**
**புறம் 218:5-6**

## வேளாண் தொழிலில் இசை

*மனித வாழிவிற்கு அடிப்படையானது உணவு. மனிதன் தோன்றிய போதே வேளாண்மையும் தோன்றியது எனலாம். உணவுப் பொருளின் இனிறியமையாமையை உணர்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர். வேளாண்மை தலைமைத் தொழிலாக உள்ளது. உலக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்திருக்கிறது. நம் தமிழ் இலக்கியங்களிலும் வேளாண்மை அதிகமாகப் போற்றப்பட்டும் எழுதப் பட்டும் உள்ளது. இத்தகைய முதன்மைத் தொழிலான வேளாண்மையில் இசையின் பங்கு மிக முக்கியமானது. பயிர்களை விலங்குகளிடமிருந்து காப்பதற்காக இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர் என்ற செய்தி மலைபடுகடாமில் கூறப்பட்டுள்ளது. தினை, சேம்பு, மஞ்சள் போன்ற பயிர்களை அவை வளர்ந்த பின் பன்றிகள் அவற்றின்*

கிழங்குகளை அகழாமல் பாதுகாக்க வேண்டும். எனவே பன்றிகளை ஓட்டுவதற்காகப் பறையினைப் பயன்படுத்துகின்றனர்.

**“சேம்பும் மஞ்சளும் ஓம்பினர் காப்போர்**
**பன்றிப் பறையும்”**

***மலைபடுகடாம் 343-344***

தினைப் பயிரினைக் கிளிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மகளிர் தட்டை என்ற இசைக்கருவியை முழுக்குகின்றனர்.

**“ஒலிக்கழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்**
**கிளி கடி மகளிர் விளிபடு புசல்”**

***மலைபடுகடாம் 328-329***

நெல்லறுக்கும் உழவர்கள் நெல்லறுக்கும் போது பறையினை ஒலிக்கும்மரபும் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது, இதற்குப் பின்வரும் புறநானுற்றுப் பாடல் வரிகள் சான்று.

**வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்**
**கண்மடற் கொண்ட தீந்தேன் இரியக்**

***புறம் 348-(1-2)***

தண்ணுமை என்பது மத்தளம் முழவு உடுக்கை ஒருகட்பறை என்பதைக் குறிக்கும்

## நடுகல் வழிபாடும் இசையும்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் பதிவுகளை இவ்வலகிற்கு உணர்த்திடும் சான்றுகளுள் நடுகற்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. நடுகல் என்பது பண்பாட்டின் வெளிப்பாடு. போர்களில் விழுப்புண்பட்டு மடியும் வீரனுக்காக அவனது வீரத்தைப் போற்றுகின்ற வகையிலும், தியாகத்தை மதிக்கின்ற வகையிலும் கல் ஒன்றினை நட்டு வழிபடுவது தான் நடுகல் வழிபாடு.

மலைபடுகடாம் என்னும் ஆற்றுப்படை நூலில் ஒரு கூத்தர் மற்றொரு கூத்தரை மன்னரைக் கண்டு பரிசில் பெற ஆற்றுப்படுத்துவான். அதில் வழி நெடுக புகழுடைய பெயர்களோடு நடுகற்கள் உண்டு. வனைந்த பாதையில் உங்களுடைய பாட்டு இன்பத்தைத் தரும் வகையில் தாளத்தோடு பாடுங்கள் தொன்று தொட்டு வழங்கும் மரபு முறைப்படி உங்கள் யாழை இயக்கி நடுகற்களை வணங்கி விட்டுச் செல்லுங்கள் என்று கூறுகிறான்.

**“ஒன்னார்த் தெய்வர் உலைவு இயத்து ஆர்த்தென**
**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**செல்லா இல் இசைப் பெயரொடு நட்ட**
**கல் ஏக கவலை எண்ணு மகப் பலவே”**

***-மலைபடுகடாம் 386-389***

## மகளிர் அக வாழ்வில் இசை

இல்லறத்தைச் சங்க காலத்தில் அகம் எனக் கொண்டிருந்தனர். களவு, கற்பு எனத் தம் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள் சங்ககாலத் தமிழர்கள். இவர்கள் இல்லற வாழ்க்கையிலும் இசை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

குல மகளிர் தம் காதல் கணவரின் புணர்ச்சி நீங்கியதால் தமக்கு உயிரினும் மேலாகப் போற்றப்படும் நாணத்தை தடுத்து நிறுத்துதற்காக ஏழிசைகளையும் தன்னிடம் கொண்ட தலைமையையுடைய இனிய நரம்பினைக் கொண்ட சிறிய யாழை பண்கள் மாற்றி வாசிப்பர். நாணத்தை மறைத்துக் கொள்ள வாசித்த யாழிசை காமத்தை மிகுவிப்பதாயிற்று.

**“நாணுக்கொன**
**ஏழ் புணர் சிறப்பின் இன்தொடைச் சீறியாழ்**
**தாழ் பெயற் கனை குரல் கடுப்ப**
**பண்ணுப் பெயர்த்து”**

***மதுரைக் காஞ்சி 559-560***

முதற்சூல் கொண்ட மகளிர் தேவராட்டியுடன் தெய்வங்களுக்கு பால் சோறு முதலிய படையல் பொருட்களை ஏந்திச் சென்று யாழில் செவ்வழி என்னும் பண்ணைப் பாடுவது மரபு.

**“நிலவு மெய்ந் நிறுத்துச் செவ்வழிப் பண்ணி**
**குரல் புணர் நல்யாழ முழுவொடு ஒன்ற”**

***மதுரைக்காஞ்சி-604-605***

மாலையில் செவ்வழிப் பண்ணும், காலையில் மருதப்பண்ணும் வாசிக்க வேண்டும் என்பது இசைநூல் மரபாகும்.

## புறவாழ்வில் இசை

சங்க இலக்கியத்தில் புற வாழ்வின் ஒரு பகுதியாக போர் தொடர்பான நெறிமுறைகளில் கூட பழந்தமிழர் இசையினைப் பயன்படுத்தி இருக்கின்றனர்

போர் நடக்கும் காலங்களில் இசைக் கலைஞர்களும் பாசறையில் இருந்து வந்துள்ளனர்.

***"பாசறையீரே பாசறையீரே***
***துடியன் கையது வேலே அடிபுனர்***
***வாங்க இரு மருப்பின் தீந்தொடைச் சீறியாழ்***
***பாணன் கையது தோலே"***

***-புறம் 285:1-4***

பாசறையில் உள்ளவர்களே கேளுங்கள் துடியனிடம் வேலையும், பாணனிடம் கேடயத்தையும் தந்து விடுவோம் என்ற வீர மறவனின் கூற்றின் வாயிலாக துடியன், பாணன் போன்றோர் பாசறையில் இருந்தார்கள் என்பதை நம்மால் அறிய முடிகிறது. மேலும் போரில் விழுப்புண் பட்டு வீழ்ந்த மன்னர்கள் தம்மைப் பாடி வந்த புலவர்களுக்குத் தம் கழுத்தில் உள்ள ஆரத்தை எடுத்துக் கொள்ளுமாறு குறிப்பால் உணர்த்தும் செய்தியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

போரின் போது முரசு, பறை, தண்ணுமை, சங்கு, ஆகுளி, யாழ் போன்ற போர்க்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. முரசு மன்னருக்குரிய அடையாளச் சின்னங்களுள் ஒன்றாக அமைந்தது.

***"வலம் முரசின் வெல்போர் வேந்தன்"***

***- புறம் 304:9***

மன்னன் போருக்கு புறப்படும் முன் முரசினை நீராட்டும் வழக்கம் காணப்படுகிறது.

போரினை அறிவிக்கவும் முரசு, தண்ணுமை கிணை போன்ற இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

***"மறப்படை நுவலும் அரிக்குழல் தண்ணுமை"***

***புறம் 270:8***

போருக்குச் செல்லும் வீரர்கள் தமக்குரிய அடையாளப் புவைச் சூடிக்கொண்டு செல்வது மரபு. எனவே அப்புவினைப் பெற்றுக் கொள்ள வாருங்கள் என்பதைத் தெரிவிக்க தண்ணுமையை முழங்கினர்.

***"கேட்டியோ வாழி-பாண பாசறைப்***
***புக்கோள் இன்று என்று அறையும்***
***முடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே"***

***- புறம் 28-8-10***

பாசறைகளில் முரசு மற்றும் சங்கு போன்ற இசைக்கருவிகளை இசைத்து துயிலெழுப்பியுள்ளனர்.

***சுடரும் சுருங்கின்று ஒளி யே பாடெமுத்து***
***இரங்கி குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப***

***- புறம் 397:4-5***

போரின் முடிவில் வெற்றி தோல்விகளை ஆறிவிக்கவும் முரசு பயன்பட்டது.

***"இன்னிசைப் பறையொடு வென்றி நுவல்"***

***-புறம் 225:10***

***"சிலைத்தார் முரசம் கறங்க***
***முலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே"***

***புறம் 36:12-13***

மன்னன் தன்னுடன் போரிடும் பகை மன்னர்களை அவர்களது முரசுடன் சிறை பிடிப்பதையும் அவைகளை அழிப் பதையுமே சிறப்பு எனக் கருதினர். இதனைப் புறநாணுற்றில் நெடுஞ்செழியன் குறித்து பாடப்பட்ட பாடல் வரிகளால் அறியலாம். நெடுஞ்செழியன் தன் பால் வஞ்சினங் கூறிய இரு பெரு வேந்தர்களையும் கொடிய போர்க்களத்தில் அழியுமாறு போரிட்டுக் கொன்று அவர்களது முரசத்தையும் கைப்பற்றிய செய்தி உள்ளது.

***"அணங்கரும் பறந்தலை உணங்கப்பண்ணி.***
***பிணியுறு முரசம் கொண்ட காலை:***

***- புறம் 25:6-7***

***"அரைசுபட அமர் உழக்கி***
***ஊரைசெல முரசு வெளவி"***

***- புறம் 26:6-7***

**"அருஞ்சமஞ் சிமையத் தாக்கி முரசமொடு ஒருங்கு அகப்பட்டேன் ஆயின்"**

**- புறம் 72:8-9**

போன்ற பாடல் வரிகள் இதற்குச் சான்று.

### மன்னனை மகிழ்விப்பதில் இசை

பொருநர்கள் ஊர் ஊராகச் சுற்றி தம் கலையைப் பரப்புதல் வழக்கம் இத்தகைய பொருநர்கள் தாம் கரிகாற் பெருவளத்தானிடம் பெற்று வந்த செல்வத்தைக் குறித்துக் கூறி நீயும் அங்கு சென்று மன்னனைக் கண்டு வா என ஆற்றுப்படுத்துமிடத்து மன்னனை மகிழ்விக்க இவர்கள் இசையை மீட்டனர் என்ற செய்தி உள்ளது.

**"மண் அமை முழவின் பண் அமை சீறியாழ் ஒண் நுதல் விறலியர் பாணிதூங்க"**

**- பொருநராற்றுப்படை 105:5-7**

மன்னன் பொருநரை வரவேற்று இனிய சுவையுடைய உணவு வகைகளை அவர்கள் தெவிட்டும் அளவிற்கு அளித்தான்.

மன்னனை மகிழ்விக்க மார்ச்சனை என்னும் மண் புசப்பெற்ற முழவு ஒலிக்க அம முழவோசைக்கு ஒத்திசைக்கும் பண்ணோசை இனிதாக அமையப் பெற்ற சிறிய யாழையும், ஒளி வீசும் நெற்றியையும் விறல் பட ஆடும் விறலியர் முழவின் தாளத்திற்கு ஏற்ப ஆடி களிப்புட்டினர் என்ற செய்திளைக் காணலாம்.

### முடிவுரை

சங்க கால மக்கள் வாழ்கையில் இசையின் பங்கு இக்கட்டுரையில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் நம் பழந் தமிழர்களின் இசையுணர்வும் இசைக்கு அவர்கள் வாழ்வில் அளித்த முக்கியத்துவமும் நம்மால் அறிய முடிகிறது இசைக்கு சாதாரண மனிதர்கள் முதல் மன்னர்கள் வரை முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சங்ககால மக்கள் இசையைப் பயன்படுத்தியுள்ளனர் இசை அனைத்து மக்களையும் ஒன்றுபடுத்தும் சக்தியாகவும் இருக்கிறது என்பதை சங்க கால மக்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

### மேற்கோள் நூல்கள்

1. புறநானூறு-புலியூர்க் கேசிகன்-பாரி நிலையம், சென்னை - 600 108 - 2017.
2. சங்க இலக்கியம் அகநானூறு: முனைவர் இரா. செயபால் நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600 098 - 2014.
3. சங்க இலக்கியம்: பத்துப்பாட்டு பகுதி 1, பகுதி 2, முனைவர் இரா. மோகன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை - 600 098 - 2014.